புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் நீர் மேலாண்மை

இரா.ராஜேஷ் குமார்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
அரசு கலைக் கல்லூரி கரூர்,-5

ஆய்வு சுருக்கம்

இயற்கை காரணிகளான நிலம், நீர், தீ, விசும்பு,காற்று என்ற ஐம்பூதங்களில் 'நீர்' இன்றியமையாதது. இது பல்லுயிர்களுக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பயன்படுகிறது. நீர் வளத்தை மையப்படுத்தி நில உயிர்கள் அனைத்தும் வாழ்கின்றன என்பதை அறிந்த பழந்தமிழர் அதன் சிறப்பினை எடுத்துக் கூறும் விதமாக இலக்கியங்கள் இயற்றியுள்ளனர். நீர், நீர் நிலைகள், , நீர் சேமிப்பு, நீர் தேக்கங்கள், நீரின் பயன்பாடு ஆகியனவற்றை பயன்பாட்டடிப்படையில் விளக்குகின்றன. ' நீரின்றமையாதது உலகு' – என உலகிற்கு எடுத்துக் காட்டியது தமிழ் இலக்கியமே. இந்த நீரின் பயன்பாட்டையும் தமிழ் இலக்கிய மக்கள் எவ்வாறு பயன்படுத்தினர், அம்முறைகளை இன்று நாம் கடைப்பிடித்தால் எதிர்கால சந்ததியினருக்கும் பயன்படும் என்பதனை கருத்தில் கொண்டு தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் நீர்மேலாண்மை ஆய்வு கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## முன்னுரை

உலகம் செழிக்க அடிப்படையாய் விளங்குவது நீராகும். மனிதர்கள் உணவு உண்ணாமல் கூட இருந்திட இயலும். நீரினைப் பருகாமல் இருப்பது என்பது எளிதான செயல் அல்ல. உலகம் உய்யவும், உயிர்கள் வாழவும் மிகமிக அவசியம் நல்ல தண்ணீர் தேவையாகும். பல ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஆறு, ஏரி, வாய்க்கால் போன்ற நீர் நிலைகளில் கைகளாலேயே நீரினை அள்ளிக்குடிக்கக் கூடிய நிலை அப்பகுதி மக்களிடையே இருந்து வந்தது. இன்று நிலை அப்படியல்ல. பாட்டில்களில் அடைக்கப்பெற்ற தூய்மைப் படுத்தப்பட்ட நீரினை பாலின் விலையைவிடக் கூடுதலாக விலைகொடுத்து வாங்கி அருந்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

நம் முன்னோர்களால் மிகவும் போற்றிப் பாதுகாக்கப்பெற்று பயன்படுத்தப்பட்டு வந்த நீரை நாம் மதிக்கத்தவறியதால் ஏற்பட்ட விளைவுதான் இன்றைய நிலை.

விசும்பின் துளிவீழின் அல்லால் மற்றுஆங்கே
பசும்புல் தாலைகாண்ப தரிது. (16)

என்கிறார் திருவள்ளுவர். வான்பொழியும் நீரே உயிர்ப்பு என்பதற்கு அடிப்படையாய் அமைகின்றது. அத்தகைய நீராதாரத்தை தமிழ் மக்கள் தொன்றுதொட்டு உயிரினும் மேலானதாகப் போற்றியுள்ளனர்.

## மழைநீர்

தட்பவெப்பத்தின் சீரான நிலையினால் மழைநீர் பொழிகிறது. நிலத்தின் உயிர்கள் அனைத்தும் நன்மையடைகின்றன. பறவைகளின் பயணப்போக்கும் விலங்குகளின் இனப் பெருக்கமுறையும், தாவரங்களின் வளர்ச்சியும், மனிதனின் வளமான வாழ்வும், இதனையொட்டி அமைகின்றன. மழையைப் போற்றும் விதமாக சிலப்பதிகாரத்தின் இளங்கோவடிகள் 'மா மழை போற்றுதும் மாமழை போற்றுதும், நாமநீர் வேலியுலகிற்கு அவனளி போல்' எனப் பாடியுள்ளார்.

பதிற்றுப்பத்து பாடலில் மழையினால் பல்வகை உயிரினங்களும் மகிழ்வு எய்துகின்றன என்ற செய்தியை எடுத்துக்காட்டியுள்ளது.

வானம் பொழுதொரு சுரப்பக் கானம்
தோடுறு மடமானேறு புணர்ந்தியலப்
புள்ளு நிமிறு மாச்சிணை யார்ப்பப்
பழனங் கிழங்கு மிசையிற வறியாது
பல்லான் என்பிரை புல்லருந் துகளப்
பயங்கடை யறியா வளம் (பதி:89, 1-6)

பண்டைய காலத்துப் பருவநிலைக் காலங்களில் காலம் தவறாது மழை பொழிந்து மக்களுக்கும், மாக்களுக்கும் நன்மை நல்கிய செயலை காலமாரி என்றும் காலம்தப்பி கேடு விளைவித்த செயலை வம்ப மாரி என்றும் அழைக்கப்பட்டன என்பதை,

மடவாழி மஞ்சை மாயினம்
கால மாரி பெய்தென ஆதெனதின்
ஆலறு மாலின பிடவும் பூத்தன (குறு: 251: 1-3)
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்பு சேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியை காரென மதித்தேதி (குறு: 66: 3-5)

என்ற பாடல் வரிகளில் காணப்படுகிறது. அதேபோன்று திருவள்ளுவர் ,மழை இல்லை எனில் கடலால் சூழப்பட்ட நில உலகம் பசியால் வாடும் என்கிறார்.

விண்இன்றி பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி4 (குறள்: 13)

நீர்த்தேக்கம்

மழைநீர் அல்லது ஆற்றுநீரை தேக்கி ஏரி, குளம், குட்டை போன்ற இடங்களிலும் நீரைத் தேக்கி மடு, மதகு, அணை போன்ற இடங்களிலும் நீர் சேமிக்கும் முறை சங்க காலம் தொட்டுஇன்றுவரைஇருந்து வருகின்றன.

மழைநீரைச் சேமித்து, சேமித்த நீரை திறம்படப் பயன்படுத்துவதன் மூலமே தமிழகத்தின் வேளாண்மை பெரிதும் நடைபெற்றது. இந்த மழை நீரினை ஏரிகள், குளங்களில் சேமித்து வைப்பது பற்றி இளங்கோவடிகள் தம் படைப்பான சிலம்பில் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்.

இடியுடைப் பெருமழை எய்தா ஏகப்
பிழையா விளையுள் பெருவளம் சுரப்ப
மழைபிணித்(து) ஆண்ட மன்னவன்...
(காடுகாண் காதை. 27-29)

இப்பாடலடியில் மழை பிணித்து ஆண்ட மன்னவன் என்பதன் பொருள் முறையாகப் பெய்யும் மழை நீரினை ஏரி, குளங்களில் சேமித்து அவற்றை தக்கமுறையில் பயன்படுத்தி நாட்டை வளம்பெறச் செய்யும் மன்னன் இவன் என்பதாகும்.

இதே போல மழைநீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாயக் கடமை என்று புறநானூற்றுப் பாடலில் புலவர் குடபுலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துப் பாடுகின்றார்.

நிலன் நெறிமருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவண்தட் டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே. (18:28-30)

இதன் பொருள் நிலம் எங்கெங்கு பள்ளமாக இருக்கின்றதோ அங்கெல்லாம் நீர்நிலைகள் அமையும்படி கரை அமைத்த மன்னர்களே இவ்வுலகில் என்றென்றுமு; அழியாத புகழ்பெற்று விளங்குவர் என்பதாகும். மேலும் இனியவை நாற்பது, திரிகடுகம், பெரியபுராணம் போன்ற தமிழ் இலக்கியங்களில் குளம் வெட்டுவித்தல் என்பது மிகப்பெரும் அறச்செயல் என்று போற்றப்பெறுகின்றது. காவோடு அறக்குளம் தொட்டல் மிக இனிதே என்ற வரி இனியவை நாற்பது சுட்டுவதாகும்.

மழைப்பொழிவினைத் தேக்கி வைத்துப் பயன்படுத்த ஏரிகள், குளங்கள் வெட்டுவிக்க வேண்டும் என்று கூறும் தமிழ் நூல்கள் அவற்றோடு நில்லாமல் அவைகள் எந்த வடிவில் அமைந்தால் நல்லது என்ற அறிவியல் உண்மையையும் எடுத்துச் சொல்லுகின்றன.

புறநானூற்றுப் பாடலில் கபிலர்,

அறையும் பொறையும் மணந்த தலைய
எண்நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ (118:1-3)

எனக் குறிப்பிடுவதன் மூலம் ஏரி எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பதைப் புறநானூறு வழி அறிய முடிகிறது. ஏரிக்கரை நீளம் குறைவாகவும் ஆனால், அதிகநீர் கொள்ளளவு கொண்டதுமான அமைப்பு எட்டாம் பிறை வடிவில் ஏரி இருக்கும்போது ஏற்படும். இது ஏரி வடிவமைப்பில் மிகவும் சிக்கனமான வடிவமைப்பாகும்.

இதேபோல் சிறுபஞ்சமூலத்தில் குளம் அமைக்கும் முறை பற்றிக் காரியாசான் கூறுகின்றார். அதில் பொதுக்கிணறு அமைத்தல், வரத்துக்கால், மதகுகள், மிகைநீர் வெளியேறும் கலிங்கு, தூம்பு போன்றவைகளை அமைப்பவர் சொர்க்கத்திற்குப் போவார் என்று குறிப்பிடுகின்றது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திரிகடுகத்தில் நீர் வரும் வரத்துக்கால் நன்கு அமையாத குளம் இருப்பின் அதனால் பயன் குறையும் என்ற செய்தியினை,

வாய்நன் கமையாக் குளனும் வயிறாரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார். (84)

என்று தாய்ப்பால் அருந்தாத குழந்தையும், கல்வி அற்ற நிலையில் உள்ளவர்களும் எப்படி சிறக்க முடியாதோ அதுபோல் வாய் நன்கு அமையாத குளமும் இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

மிகுதியாக வரும் ஆற்று வெள்ளநீரை தம்முள் அடக்கிக் கொள்ளக்கூடிய பெரும் ஏரிகள் இருப்பது ஒரு நாட்டுக்குச் சிறப்புத் தரும் என்பதை, "யாறுள் அடங்குங் குளமுள வீறுசால்' என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது. இப்பாடலில் குறிப்பிடப்படும் ஆறு உள் அடங்கும் குளம் என்ற சொற்றொடர், நீர் மேலாண்மைத் திறத்தின் ஒரு முக்கிய வெளிப்பாடாகும். பெரு வெள்ளம் ஏற்படும் காலங்களில் அந்நீரை உரிய முறையில் சேமித்து, நீர் இல்லாத காலங்களில் பயன்படுத்தக்கூடிய நிகழ்வை இச்சொற்றொடர் எடுத்துக்காட்டுகிறது. கண்மாய்களையும், குளங்களையும் காத்து நின்ற அதாவது, முறையாகப் பராமரித்த செய்தியை அகநானூற்றுப் பாடல்,

"பெருங்குளக் காவலன் போல
அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளே'' (25)

என்கிறது. அதாவது, பனியிலும், மழையிலும், அடர்ந்த இருள் சூழ்ந்த நள்ளிரவிலும் ஏரியைக் காக்கும் காவலன்போல, குழந்தையைப் பாதுகாக்க அன்னை தன் தூக்கத்தை மறந்தாள் என்பது இப்பாடலின் பொருள். சிறு குழந்தையைத் தாயானவள் கண்ணை இமை காப்பதுபோல் காத்த செயலும், நீர் நிலைகளைக் காக்கும் செயலும் ஒன்றாகவே எண்ணப்பட்டு வந்துள்ளது.

பழந்தமிழ் நூல்களில் இத்தகு நீர்நிலைகளிலிருந்து மிகுநீரை வெளியேற்ற கலிங்கு என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர். இக்கலிங்கு குறித்த தகவல்கள் மிகுதியாக இலக்கியங்களில் சுட்டிக் காட்டப்பெற்றுள்ளன. ஏரியின் முழுக்கொள்ளளவு நீர்மட்டத்தைக் கணக்கிட்டு, இயற்கையாகவே பள்ளமாக உள்ள கரையின் ஒரு பகுதியில் அந்த உயர அளவில் சிறு வடிகால் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் மிகும் நீரை வெளியேற்றி வந்தனர். இந்நீர் வெளியேற ஒரு கால்வாய் ஏற்படுத்தி அடுத்த ஏரியிலோ அல்லது ஆற்றிலோ கலந்துவிடும்படி செய்திருந்தனர். இதனால் நீர் வீணாவது தடுக்கப்படுவதோடு, எவ்வளவு வெள்ளம் வந்தாலும் ஏரியின் கொள்ளளவைத் தாண்டிய நீர் இக்கலிங்கு வழியே வெளியேற்றப்படுவதால் ஏரியின் கரை உடைப்பெடுப்பதும் தடுக்கப்பெற்றது. இத்தகு தொழில்நுட்பம் நம் தமிழகத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

மேலும் ஏரிக்கரையின் உயரம், அகலம் ஆகியவை எவ்வளவு இருக்கவேண்டும். கரைக்கு வெளியே குறிப்பிட்ட தூரம் வரை உள்ள நிலத்தை யாரும் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது.

கரையில் மரங்களை நட்டுப் பராமரித்தல், அம்மரங்களை யாரும் வெட்டுதல் கூடாது போன்ற பல மேலாண்மைத் தொடர்பான செயல்களையும், ஏரிகளைப் பராமரிக்க ஒரு தனி நிருவாக அமைப்பாக ஏரி வாரியம் அமைக்கப்பட்டிருந்த செய்திகளையும் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது. தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான எண்ணற்றப் பேரேரிகள் இருந்தன. அவற்றைப் பராமரிக்க குளப்பட்டி என்ற பெயரால் நிலமளித்து அதன் வருவாயிலிருந்து ஏரிகளைக் காக்க வகைசெய்தனர்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையின் பன்னிரண்டாம் காதையான அறவணர் தொழுத காதை என்னும் பகுதியில் புத்ததேவன் தோற்றம் பற்றிக் கூறவரும் கூலவாணிகன் சாத்தனார்,

பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்பரு நல்லறம்
உளமலி உவகையோடு உயிர்கொளப் புகூம். (79-82)

என்கிறார். சுருங்கை என்பது பூமிக்கடியில் செல்லும் சிறிய குழாய் அதாவது பெருங்குளங்களாகிய பேரேரிகளின் ஒருபுறம் உள்ள சிறிய சுருங்கை வழியாக அங்கு தேக்கப்பட்ட நீர் வெளியேறி மக்களுக்கு அளவிட இயலாத வகையில் பயன்தரும். அதுபோல, செவித்துளை வழியே நல்ல அறக்கருத்துக்கள் உள்ளத்தைச் சென்றடையும் என்பதே இதன் பொருளாகும்.

நீரின்பயன்பாடு

நாவலம் தண்பொழில் என்று சொல்லக்கூடிய தமிழகம் நீர் வளம் மிக்கது. நீரின் அடிப்படை ஆதாரங்கள் இன்றியமையாத ஒன்று, அதனால் தொல்காப்பியர் நிலம், நீர், விசும்பு. தீ, வளி கலந்தது. இந்த உலகம் என்கிறார். முந்நீர் உடைய நாடு (புறம். 60) என்றும் கூறப்படுகிறது. உழவுத் தொழிலில் பாசன முறை, நீரின்றி நடைபெறாது என்பதை வள்ளுவர் விசும்பின் துளி இல்லை யென்றால் நிலத்தில் பசும் புல் கூட தலைகாணாது என இயம்பியுள்ளார். (குறள். 16) உணவு, உடை, உறையுள் என அனைத்திற்கும் நீரின் பயன்பாடு முக்கியத்துவம் வாய்ந்தது. இதனை மெய்ப்பிக்கும் வகையில் பாடப்பட்டுள்ளது.

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோரே யிர் கொடுத்தோர்
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணிரியோரின்
உடம்பும் உயிரும் படைதினோரே (புறம். 18:18-23)

என்ற பாடலில் நீர் பயன்பாட்டில் உழவுத்தொழில் அடங்கும் எனக் குறிப்பிட்டுள்ளது.

பொன் செய் கணிச்சித் திணி உடைத்து
சிறறுசில ஊறிய நீர்வாய் பத்தல் (பதிற். 22:12-14)
புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்
சீருடைப் பல்பகடு ஒலிப்பப் பூட்டி
நாஞ்சில் பூடிய கொழுவழி (பதிற். 58:15-18)

போன்ற பாடல்கள் நீர்ப்பாசன முறையை எடுத்தியம்புகின்றன.

முடிவுரை

நீரினால் அழிவு சக்தியை விட ஆக்கல் சக்தியே அதிகம். நீர் உணவாகவும், உட்கொள்ளும் மருந்தாகவும், பல் உயிரினம் செழிக்கவும், வேளாண்மை உற்பத்திக்கும் தொழிற் சார்புக்கொள்கைக்கும் காலத்திற்காலம் நீரின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. வழிபாட்டு முறைகளில் கல்லையும், மண்ணையும் வழிபட்டவன் நீரையும் விட்டு வைக்கவில்லை.'ஆலயம் இல்லா ஊர் பாழ்' எனச் சொல்லுவர் ஆலயங்களில் மூர்த்தி விருட்சம் நீரையும் (தீர்த்தம்) சேர்த்து அருவி, ஆறு, குளம், கடல் போன்ற இடங்களில் தீர்த்தம் ஆடி வருகின்றனர். நீரைப் புனித நீர் என்ற பெயரில் அனைத்து சமயத்திலும் பயன்படுதப்படுகிறது. துளசி, வேம்பு, செம்பு கலந்த நீர் புனிதம் என்கின்றனர். நீரின் பயன்பாட்டு முறைக்கு முன்னோடியாகத் திகழ்வது சங்க கால வாழ்க்கை முறை எனக் கூறலாம். ஏனென்றால் தொன்மை கால மக்கள் தத்தம் வாழ்விடத்தின்

*நிலம், நீர், காற்று, மண், மரம், செடி, கொடி ஆகியவற்றை ஆராய்ந்து இவை உணவுக்கும், உடைக்கும், உணர்வுக்கும், உடலுக்கும், உயிருக்கும், எதிர்கால சந்ததியினருக்கும் என ஆராய்ந்து அதன் வண்ணம் வாழ்ந்துள்ளனர். இச்சங்க கால இலக்கியங்களை உற்று நோக்கும் போது 'நீர் மேலாண்மையில்' சிறப்புடன் வழ்ந்தனர் என்பது நன்கு புலனாகிறது.*


*பார்வை நூல்கள்*

- *அகநானூறு*
- *பதிற்றுப்பத்து*
- *புறநானூறு*
- *திருக்குறள்*
- *திரிகடுகம்*
- *சிலப்பதிகாரம்,*
- *மணிமேகலை*
- *விக்கிபீடியா. www.valaitamil.com/tami-language,*


********* ********* ********** ********* ********* ********** ********** **********